<u>முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருப்பூர்</u>

நிறைவேற்றுகை மனு எண். 19/2018

இன்று 2023 ம் ஆண்டு நவம்பர் திங்கள் 3ம் நாள் இன்று இந்த எ.ம.சா.1ன் வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டு 54 வது பிரிவின் ஏற்பாட்டின்படி) திரு.கே.ஆர்.கண்ணன்,B.A.,B.L., அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்யப்படுகிறது.

பெயர் : கவிதா

கணவர் பெயர் : கல்யாண சுந்தரம்

வயது : 47

<u>முதல் விசாரணை</u>

நான் தாக்கல் செய்துள்ள பிரமாண பத்திரிக்கையில் கூறியுள்ள விபரங்கள் அனைத்தும் எனக்கு தெரியும். அவை நான் கூறியவை தான். அதிலுள்ள கையொப்பம் என்னுடையது தான். அதனை எனது முதல் விசாரணை சாட்சியமாக ஏற்றுக்கொள்ள கோருகிறேன். கீழ்க்கண்ட ஆவணங்களை எனது தரப்பில் குறியீடு செய்யக் கேட்டுக் கொள்கிறேன்.

13.07.1953 – சாமாத்தாள் பெயரிலுள்ள கிரயப் பத்திரத்தின் சான்றிட்ட நகல் **எ.ம.சா.ஆ.1** ஆகும் (அசல் ஆவணம் வங்கியில் கடனுக்காக அடமானம் வைக்கப்பட்டுள்ளது)

01.08.2008 – சரிதா பெயரிலுள்ள தான செட்டில்மெண்ட் பத்திரத்தின் சான்றிட்ட நகல் **எ.ம.சா.ஆ.2** ஆகும் (அசல் ஆவணம் வங்கியில் கடனுக்காக அடமானம் வைக்கப்பட்டுள்ளது)

08.08.2021 – சண்முகம் இறப்புச் சான்றிதழ் கணினி நகல் **எ.ம.சா.ஆ.3** ஆகும்

06.09.2022 – சண்முகம் வாரிசு சான்றிதழ் கணினி நகல் **எ.ம.சா.ஆ.4** ஆகும்

11.02.2023 – 2021 முதல் 2023 வரையிலான வீட்டு வரி ரசீது **எ.ம.சா.ஆ.5** ஆகும்.

20.12.2022 – 2022–2023 வருடத்திற்கான தண்ணீர் வரி ரசீது **எ.ம.சா.ஆ.6** ஆகும்.

மின் கட்டண ரசீது 1 எண்ணிக்கை **எ.ம.சா.ஆ.7** ஆகும்.

31.10.2017 – தாவாச் சொத்தை எல்.என்.டி. ஹவுசிங் பைனான்சில் அடமானம் வைத்ததற்கான அடமான சான்றிட்ட நகல் **எ.ம.சா.ஆ.8** ஆகும்.

07.03.2022 – திருப்பூர் வடக்கு பிளாக் 109 சர்வே எண் 2 க்குரிய ரயத்துவரி மனைப் பட்டா கணினி நகல் **எ.ம.சா.ஆ.9** ஆகும்.

**மேலும் ஆவணங்கள் குறியீடு செய்ய அவகாசம் கோரியதால் முதல் விசாரணை தொடர்ச்சி ஒத்தி வைக்கப்படுகிறது.**

சாட்சி கூறியபடி என் வாய்மொழிப்படி தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காட்டப்பட்டு, அவரால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்ட பின்னர் அவரது கையெழுத்துப் பெறப்பட்டது.

Sd/-K.R.Kannan
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி
திருப்பூர்.